ஆண்டு பட்டிகை வழக்கு எண்.105/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 105/2025 | LW- 1 | | PW- 1 |
| Name | : ராஜேஸ்வரி ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : தமிழ்செல்வம் | | |
| Village | : வேம்பரளி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 36/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மலையாண்டி என்பவரை எனக்கு தெரியும். கடந்த 26.02.2025ம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் எனது மகன் கோபிக்கு உடல்நிலை சரியில்லாததால் என் அப்பா நாகராஜ் என்பவர் டீ வாங்குவதற்காக எங்களுக்கு சொந்தமான TN 57 CW 4359 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் சென்று டீ வாங்கிவிட்டு திரும்பி வரும்போது டோல்கேட் அருகில் உள்ள எங்கள் வீட்டிற்கு திரும்பும் டிவைடர் அருகே வடக்கிலிருந்து தெற்கே வந்த TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட லாரி கிராவல் ஏற்றிக்கொண்டு அதிவேகமாக வந்து என் அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது அருகில் இருந்த ஒரு நபர் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னதன்பேரில் எங்கள் வீட்டின் அருகில் உள்ள சம்பவ இடத்தில் நான் சென்று பார்த்தபோது

என் அப்பா ரத்த வெள்ளத்தில் கிடந்தார். எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன ஜெயமணி என்பவரும் அருகில் இருந்தார்.

2) என் அப்பாவின் இருசக்கர வாகனம் நொருங்கி கிடந்தது. என் அப்பாவின் மீது மோதி நிற்காமல் சென்றுவிட்டதாக ஜெயமணி என்பவர் சொன்னார். பின்னர் என் அப்பாவை நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து முதலுதவி சிகிச்சை பெற்ற பின் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தோம். என் அப்பாவிற்கு இடதுபக்க தலையில் பலத்த காயமும், இடது காதில் ரத்தம் வழிந்தும், இடது பக்க கை, கால்களில் சிராய்ப்பு காயமும் இருந்தது. என் அப்பா மதுரை அரசு மருத்துவமனையில் ஒரு மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். பின்னர் நான் என் வீட்டிற்கு அழைத்து வந்தபிறகும் என் அப்பா முழுமையாக குணமாகாமல் இருந்து வந்தார். இன்று வரை மனநிலை பாதிக்கப்பட்டநிலையில் இருந்து வருகிறார். என் அப்பாவிற்கு மனநோய் அதிகமாகும்போது அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருகிறோம். நான் மதுரை அரசு மருத்துவமனையில் என் அப்பாவை சிகிச்சைக்கு சேர்த்தவுடன் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பமும் என்னுடைது தான். (**அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் நான் எனக்கு தகவல் சொன்ன ஜெயமணி என்பவரிடம் விசாரித்தபோது, மங்கபாகன் மகன் மலையாண்டி என்பவர் தான் லாரியை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்தியதாக கூறினார். ஆஜர் எதிரியை பக்கத்து ஊர்க்காரர் என்ற முறையில் எனக்கு ஏற்கனவே தெரியும். அவர் K.R.K.லாரியை ஓட்டுக்கின்ற விபரமும் எனக்கு தெரியும், அதனடிப்படையில் நான் போலீசாரிடம் புகார் மனு கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

3) எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றாலும், கேள்விப்பட்டு தான் தெரியும் என்றாலும் சரிதான். எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். புகாரை சம்பவம் நடந்த அன்றைய தினமே கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் எனது தந்தை சாலையை கடக்க முயன்ற போது விபத்து நடந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கும், டோல்கேட்டிற்கும் இடையே சுமார் 200 அடி தூரம் இருக்குமா என்றால் இருக்கும். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்தும், எனது அப்பாவை மருத்துவமனையில் வைத்தும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னையும், எனது அப்பாவையும் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்ததாக தெரிவித்து இருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

4) ரோட்டை கடப்பதற்கு முன்பாக எனது தந்தை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தாரா என்றால் திரும்பி நின்று கொண்டிருந்த போதுதான் விபத்து ஏற்பட்டது என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து இருப்பார். எனது அப்பா முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து அதற்கு பிறகு தான் ரோட்டை கடந்தார் என்று புகாரில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சுமார் 200 அடி தூரத்தில் டோல்கேட் இருப்பதால் பொதுவாக வாகனங்கள் அந்த பகுதிக்கு மெதுவாக தான் வரும் என்றால் சரியல்ல, சில வாகனங்கள் வேகமாக வருகின்றது. பொதுவாக வாகனங்கள் டோல்கேட் அருகே வரும் பொழுது வேகத்தை குறைத்து விடும் என்றாலும், காயம் பட்ட நபர் எனது

அப்பா என்பதால் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) சாட்சிகள் நடராஜன் மற்றும் சொர்க்கம் ஆகியோர் புகார் கொடுக்கும் போது என்னுடன் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் இல்லை. மேற்படி நபர்கள் எனது உறவினர்கள் என்றால் இல்லை தெரிந்த நபர்கள். டோல்கேட்டில் எட்டு கவுண்டரிலும் ஆட்கள் உள்ளார்கள் என்றாலும், அதே போல் கவுண்டருக்கு வெளியே வடக்கு பக்கம் உள்ள ஷெட்டில் வங்கி ஊழியர்கள் வாகனங்களுக்கு பாஸ்ட் ட்ராக் பணம் டாப் அப் செய்வதற்காக இருப்பார்கள் என்றால் சரிதான். டோல்கேட்டில் உள்ள கேமராக்களில் வாகனங்கள் வரும் பதிவுகள் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். கேமரா பதிவுகளோ அல்லது டோல்கேட்டில் பணி செய்யும் ஊழியர்களையோ காவல்துறையினர் விசாரித்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் விசாரித்தார்கள்.

6) எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், முதல் விசாரணையில் லாரி அதிவேகமாக வந்ததாக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் இடித்த லாரி நிற்காமல் சென்றுவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு சொல்லி தான் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் மேற்படி விபரங்கள் இல்லாமல் இருந்தால் அது நான் கொடுத்த புகார் மனு கிடையாது என்றால் சரிதான். எனக்கு விபத்து தொடர்பாக தகவல் சொன்ன நபர் ஜெயமணி என்று குறிப்பிட்டு தான் புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியது போன்றும், நான் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள புகார் மனுவில் உள்ளது

**போன்றும் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் காயம் பட்ட நபர் எனது தந்தை என்பதால் வாகன விபத்து இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக புகார் கொடுத்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை வாகன விபத்து இழப்பீடு பெற மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.16 17:58:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 105/2025 | LW– 2 | PW– 2 |

| | |
|---|---|
| Name | : நாகராஜன் (காயம்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : அழகன் |
| Village | : பரளிப்புதூர் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 69/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள் என் மகள் அ.சா.1 ன் மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் இருசக்கர வாகனத்தில் சென்று காப்பியும், காய்ச்சல் மாத்திரையும் வாங்கிகொண்டு திரும்பி வருவதற்காக நின்று கொண்டிருந்தபோது நத்தத்திலிருந்து வந்த லாரி என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு இடதுபக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, காதில் ரத்தம் வழிந்தது. இன்று வரை காதில் நீர் வடிந்து கொண்டு இருந்தது. அதனால் எனக்கு காது சரியாக கேட்கவில்லை. இடது முழங்காலில் பலத்த காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை மூலம் பிளேட் வைக்கப்பட்டுள்ளது.

2) நான் அரசு மருத்துவமனையில் 19 நாட்கள் ICU–விலும், பின்னர் வார்டிலும் சுமார் ஒரு மாதங்களுக்கு மேலாக உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அதன் பிறகும் பரளியில் தனியாரில் மருத்துவம் பார்த்து வருகிறேன்.

நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது போலீசார் என்னை வந்து பார்த்துவிட்டு சென்றதாக கேள்விப்பட்டேன். இன்றுவரை என்னால் இரண்டு கை தோள்பட்டையையும் அசைக்கவோ, தூக்கவோ முடியவில்லை. தலை திடீரென பாரமாக தலைச்சுற்றல் ஏற்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3) நான் சாலையை கடக்க முற்பட்ட போது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் ரோட்டின் கிழக்கு பக்கம் சாலை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தேன். டம் என்று சத்தம் கேட்டது அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று தெரியாது. ஜெயமணி என்பவர் நான் வண்டியில் இருந்து கீழே விழுந்து 15 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது நான் மயக்கமாகிவிட்டேன். எனக்கு பின்னால் யாராவது வந்தார்களா என்றால் இல்லை. எனக்கு வண்டி ஓட்டுவதற்கு லைசன்ஸ் இல்லை என்றால் சரிதான். நான் இழப்பீடு தொகை பெறுவதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு நான் ஒரு காலை சிறிது சாய்த்து நடப்பேன் என்றால் இல்லை. நான் சாலையை முறையாக இருபுறமும் பார்த்து கடக்கவில்லை என்பதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்ததாக எழுதியுள்ளது என்ன என்று தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.16 17:58:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 105/2025 | LW– 3 | PW– 3 |
| Name | : மணி (எ) ஜெயமணி ( கண்ணுற்ற சாட்சி) | | |
| Father's/Husband's Name | : பூவலிங்கம் | | |
| Village | : கொடுகம்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 51/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும், அவர்கள் எங்கள் பக்கத்து ஊர்க்காரர்கள். நான் ரோட்டில் ஓரமாக குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2025 ம் வருடம் 2 ம் மாதம் ஒரு நாள் காலை சுமார் 5.30 மணியளவில் அ.சா.1 ன் வீட்டின் அருகே டோல்கேட் செல்வதற்கு முன்பாக அ.சா.2 இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்புவதற்காக சாலையின் இடதுபக்கம் நின்றுகொண்டிருந்தார். நான் அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தேன். அப்போது நத்தத்திலிருந்து வந்த லாரியை ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து அ.சா.2 ன் மீது மோதிவிட்டு ரிவர்ஸ் எடுத்து நிற்காமல் முன்பக்கமாக வேகமாக சென்றுவிட்டார். ஆஜர் எதிரியின் பெயர்

மலையாண்டி ஆகும். அப்போது விபத்தில் காயம்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்த அ.சா.2 ஐ பார்த்ததும் அவருடைய மகள் அ.சா.1 ற்கு போன் மூலம் தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

2) ஆ.சா.2 நடராஜன் சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். நான் சுமார் 20 அடி தூரத்தில் இருந்தேன். லாரி என்னை முந்தி சென்றது. லாரி என்னை முந்தி சென்றதால் லாரியின் பின்பக்கத்தை தான் நான் பார்க்க இயலும் என்றாலும், அதன் முன் பக்கத்தை பார்க்க இயலாது என்றாலும் சரிதான். லாரியை ரிவர்ஸில் எடுத்த பிறகுதான் விபத்து ஏற்பட்டு நடராஜன் அடிபட்ட விபரம் தெரியும் என்றால் சரிதான். எதிரியை போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயம் காலை 5.30 என்பதால் சூரிய வெளிச்சம் இல்லை என்றால் சரியல்ல விடிந்து இருந்தது. சம்பவம் நடந்தவுடன் சுமார் 5.45 மணிக்கு நடராஜன் வீட்டிற்கு தகவல் சொன்னேன். ஆம்புலன்ஸ் மற்றும் அ.சா.1 வருவதை பார்த்த பிறகு நான் எனது வீட்டிற்கு கிளம்பி விட்டேன்.

3) போலீசார் சம்பவம் ஆனது ரோட்டின் நடுப்பகுதியில் நடந்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல கிழக்கு பக்கம் விபத்து ஏற்பட்டு இருசக்கர வாகனத்துடன் நடராஜன் என்பவர் சாலையின் நடுப்பகுதி வரை இழுத்து செல்லப்பட்டார். அவ்வாறு இழுத்துச் செல்லப்பட்டால் சாலையில் தடங்கள் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 ற்கு போனில் தகவல் சொன்னபோது மேற்படி விபரத்தை சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே டோல்கேட் உள்ளது என்றால் சரிதான். டோல்கேட்டில் கேமராக்கள் உள்ளது என்றாலும் அதை பார்த்தால் விபரம் தெரியும் என்றாலும் சரிதான். டோல்கேட்டில் உள்ள நபர்கள் விபத்தை பார்த்தார்கள் என்றால்

சரிதான். டம் என்று சத்தம் கேட்ட பிறகுதான் அடிபட்ட நபர் நடராஜன் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி வாகனத்தை அதிவேகமாக ஓட்டவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் எனக்கு தெரிந்த நபர் என்றாலும், அவருக்கு இழப்பீடு பெற்று தர பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.16 17:58:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.105/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 105/2025 LW- 4 PW- 4

| | | |
|---|---|---|
| Name | : | கண்ணன் ( கேள்வியுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : | நாகராஜன் |
| Village | : | பரளிப்புதூர் |
| Taluk | : | நத்தம் |
| District | : | திண்டுக்கல் |
| Age | : | 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து டிராக்டர் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை, அ.சா.2 என் அப்பா. ஆஜர் எதிரி மலையாண்டி என்பவரை நான் பார்த்து இருக்கிறேன். கடந்த 26.02.2025ம் தேதி காலை 5.30 மணி முதல் 6.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கும், அருகில் உள்ள டோல்கேட்டிற்கும் அருகில் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் என் தங்கை மகனுக்கு காய்ச்சல் என்பதால் டீ வாங்க சென்றிருந்தபோது ஆஜர் எதிரி மலையாண்டி என்பவர் நத்தத்திலிருந்து மதுரை நோக்கி லாரியில் எம்சாண்ட் ஏற்றிக்கொண்டு வந்து என் அப்பாவின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக எனது தங்கை அ.சா.1 சொன்னதன்பேரில் சம்பவ இடம் சென்று பார்த்தோம். என் அப்பாவிற்கு தலையிலும்,இடது காலிலும் பலத்த காயம் ஏற்பட்டும், காதில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பின்னர் அங்கு வந்த 108 அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி

சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்னர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு என் அப்பா சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2) சம்பவம் எனக்கு கேள்விப்பட்டு தான் தெரியும் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு லைசன்ஸ் இல்லை என்றால் சரிதான். சாலையை கடக்க முயற்சி செய்தபோது விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரியல்ல சாலையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த போது விபத்து நடந்ததாக சொன்னார்கள். டோல்கேட்டில் உள்ள கேமரா பதிவுகள் மற்றும் டோல்கேட்டில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியவர்களை விசாரித்தால் விவரம் தெரியும் என்றால் சரிதான் விசாரித்தார்கள். நான் கேள்விப்பட்டது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எனது தந்தைக்கு இழப்பீடு பெற்று தர பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லாரியை யார் ஓட்டி வந்தார் மற்றும் லாரி தொடர்பான விபரங்கள் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல, எனது தங்கை சொல்லி தெரியும். எனது தங்கைக்கும் விபத்து பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல—சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.16 17:58:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.105/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 105/2025 | LW- 6 | PW- 5 |

| | |
|---|---|
| Name | : சொர்க்கம் ( பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : பூசாரி |
| Village | : பரளிப்புதூர் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் விபத்து நடந்ததற்கும் மறுநாள் நான் என் தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்தபோது டோல்கேட்டிற்கு வடக்குப்பக்கம் நத்தம் போலீசார் வந்து விபத்து சம்பந்தமாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன் (**பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

2) நான் கையொப்பம் செய்த நேரம் என்ன என்றால் மதியம் 1.00 முதல் 2.00 மணி இருக்கும். போலீசார் வரைந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் போலீசார் என்ன எழுதி இருந்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். போலீசார் அந்த ஆவணத்தை என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன் என்றாலும், அ.சா.1ம் மற்றும் அ.சா.2 எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.04.16 17:58:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்